# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 620/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 25.10.2025.**

| | |
|---|---|
| **Name : ரியாஸ்கான்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு,குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

1) நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் வழக்கறிஞராக வேலை செய்கிறேன். வழக்கறிஞர் தொழில் தவிர்த்து வேறு வேலை செய்து வருகிறேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் எதிரி பழனிசாமியை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 20 வருடமாக தெரியும். நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு முன்னர் எனக்கும் பழனிசாமிக்கும் ஏதாவது வரவு செலவு இருந்ததா என்றால் இல்லை.

2) பணம் கொடுத்த தேதிக்கு முன்னிட்டு நானும் பழனிசாமியும் ஏதாவது தொழிலில் கூட்டாளியாக இருந்தோமா என்றால் இல்லை. 19.04.2024 ம் தேதி எதிரி ரூ.30,00,000/– கைமாற்று கடனை எதிரி கேட்டவுடனே கொடுத்தேனா அல்லது அதற்கு முன்னர் பணம் கேட்டாரா என்றால் 3 மாதமாக பணம் கேட்டார். என் மகன் மற்றும் என் மாமனாரிடம் வீடு கட்டுவதற்காக கடன் வாங்கி வைத்திருந்தேன். அதனை எதிரியிடம் கொடுத்தேன். எந்த சர்வே எண்ணில் எந்த இடத்தில் வீடு கட்ட நான் திட்டமிட்டு இருந்தேன் என்றால் ஏற்கனவே இருந்த வீட்டை புதுப்பிக்க பணத்தை கடனாக வாங்கி வைத்திருந்தேன்.

3) நான் புது வீட்டை பராமரிக்க பணம் வாங்கி வைத்திருந்தேன். அந்த பணத்தை கைமாற்று கடனாக எதிரியிடம் கொடுப்பதற்கான காரணம் என்னவென்றால்

எதிரி நல்ல நண்பர் என்பதால் கொடுத்தேன். ஏற்கனவே என் மாமனாரிடம் கடன் பெற்று வைத்திருந்த தொகையை மீண்டும் மற்றொருவருக்கு கடன் கொடுக்க வேண்டிய அவசியம் என்னவென்றால் வீடு 2, 3 மாதம் கழித்து கட்டுவதறாக இருந்த நிலையில் பணம் கையில் இருந்ததால் எதிரியிடம் கொடுத்தேன்.

4) யார் யாரிடமிருந்து பணம் கடன் வாங்கினேன் என்றால் என் மகனிடமிருந்தும், என் மாமனாரிடமிருந்தும் கடன் பெற்றேன். என் மகன் சென்னையில் அமெரிக்கா IT applied materials நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். அவர் மாத வருமானம் எவ்வளவு என்றால் தோராயமாக 1,50,000/- லிருந்து 2,00,000/- வரை பெறுவார். அவரிடம் எவ்வளவு கடன் எந்த தேதியில் பெற்றேன் என்றால் ரூ.15,00,000/- பணம் பெற்றேன். கடன் கொடுத்த 6 மாதம் முன்பே என் மகனிடமிருந்து கடன் பெற்றேன். என் மகன் மேற்படி தொகைக்கான வருமான வரி செலுத்தியுள்ளாரா என்றால் செலுத்தியுள்ளார்.

5) 19.04.2024 ம் தேதி பணம் ரூ.30,00,000/- கடன் கொடுத்த நிலையில் 2023 ம் ஆண்டே நான் பணம் என் மகனிடமிருந்து கடனாக பெற்றேன் என்றால் ஆமாம். என் மகனுக்கு திருமணம் ஆகவில்லை. என் மகனின் வேலையை தவிர்த்து நானும் என் மகனும் ஒன்றாக வசிக்கிறோம் என்றால் ஆமாம். என் மகனும் நானும் ஒரே குடும்பமாக இருக்கும் போது என் மகனிடமிருந்து தனிப்பட்ட முறையில் கடன் பெற வேண்டிய அவசியம் என்னவென்றால் பெரிய தொகை என்பதால் அவரிடம் கடன் பெற்றேன்.

6) ஒரே வீட்டில் வசிக்கும் போது என் மகனிடம் கடன் வாங்கியதாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. என் மகனிடம் கடன் வாங்கியதற்குண்டான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் மகன் 2023 ம் வருடம் வருமான வரி கணக்கில் வருமான வரி தாக்கல் செய்ததற்குண்டான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7) என் மகனுக்கு வரும் வருமானம் குறித்து அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்

மாமனாரிடமிருந்து எவ்வளவு கடன் பெற்றேன் என்றால் ரூ.10,00,000/- பெற்றேன். எந்த தேதியில் பெற்றேன் என்றால் கடன் கொடுத்த தேதிக்கு 2 மாதத்திற்கு முன்னர் பெற்றேன். என் மாமனார் என்ன தொழில் செய்கிறார் என்றால் மேட்டூர் RC Plant ல் வேலை பார்த்து ஓய்வு பெற்றார்.

8) மேட்டூர் RC Plant எந்த ஆண்டு மூடப்பட்டது என்றால் தற்போது நடந்து வருகிறது. எப்போது ஓய்வு பெற்றார் என்றால் 10 ஆண்டுகளுக்கு முன்பு என் மாமனார் ஓய்வு பெற்றார். என் மாமனார் மேட்டூர் RC Plant ல் பணி செய்து ஓய்வு பெற்றதை தவிர்த்து தனிப்பட்ட முறையில் வேறு வருமானம் வருகிறதா என்றால் இல்லை. ஓய்வு பெற்ற தொகை முழுவதும் வங்கியில் சேமிப்பாக வைத்திருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9) நான் கேட்ட பணத்தை என் மாமனார் எப்படி கொடுத்தார் என்றால் என் மனைவியிடம் கொடுத்துவிட்டு சென்றார். என்மாமனாரை விசாரித்தால் எப்படி பணம் எடுத்து கொடுத்தார் என்ற விவரம் தெரியும் என்றால் ஆமாம். என் மகனிடம், என் மாமனாரிடம் கடன் பெற்ற தொகையை எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிராதிலோ சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. எனக்கு மீதமுள்ள தொகை எவ்வாறு வந்தது என்றால் காம்ப்ளக்ஸ் மற்றும் வீட்டு வாடகை வருமானத்தை வைத்து கொடுத்தேன்.

10) இதுவரை வீட்டு வேலையை துவங்கினேனா என்றால் ஆரம்பித்து நின்றுவிட்டது. எதிரிக்கு பணம் கொடுத்த பின்னிட்டு தான் வீட்டு புதுபிப்பு பணி துவங்கியது. ஒரு தனி நபர் எவ்வளவு தொகைக்கு மேல் போனால் வருமான வரி செலுத்த வேண்டுமென்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ரூ.12,00,000/-க்கு மேல் சென்றால் அரசுக்கு வருமான வரி செலுத்த வேண்டும். எதிரிக்கு 2024ம் வருடத்தில் ரூ.30,00,000/-க்குண்டான வருமான வரியை அரசுக்கு செலுத்தினேனா என்றால் என் மகன் மற்றும் என் மாமனார் வரி செலுத்தி பின்னர் தான் என் வசம் கொடுத்தார்கள். அதனால் நான் தனிப்பட்ட முறையில் வரி செலுத்தவில்லை.

11) என் மாமனார் வரி செலுத்தி பணம் என்னிடம் கொடுத்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் அவர் பெற்ற சம்பளம் வரி பிடித்தம் செய்த பின்னர் தான் வழங்குவார்கள். எனக்கு பணம் கொடுத்ததாக மாமனார் கொடுத்த தேதியில் ரூ.10,00,000/-க்குண்டான வருமான வரி செலுத்தினாரா என்றால் தெரியாது.

12) என் மாமனார் மற்றும் மகனிடமிருந்து கடனாக வாங்கிய ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்பிக்க முடியுமா என்றால் என் மகனிடம் நம்பிக்கையின் பேரில் வாங்கினேன். என் மாமனார் வசம் காசோலை கொடுத்தேன். அந்த காசோலை எண் என்ன எந்த வங்கிக்கு வரையப்பட்ட காசோலை நிரப்பப்பட்ட தொகை எவ்வளவு என்றால் ரூ.10,00,000/- தேதியிடாத காசோலையை கொடுத்தேன். அந்த காசோலை எந்த ஆண்டு கொடுக்கப்பட்டது என்றால் 2024 ம் வருடம் கொடுத்தேன்.

13) என்மாமனாருக்கு திருப்பி ரூ.10,00,000/- பணத்தை கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. காசோலைக்கு பிறகு என் மாமனார் வேறு ஏதாவது ஆவணம் என்னிடம் பெற்றாரா என்றால் இல்லை. ஒரு ஆவணத்தை தேதி குறிப்பிடாமல் வழங்கக்கூடாது என்ற விவரம் வழக்கறிஞர் என்ற முறையில் எனக்கு தெரியுமா என்றால் எப்போது பணம் கொடுக்க முடியுமோ அப்போது அதை பூர்த்தி செய்ய சொன்னதால் நான் பூர்த்தி செய்யவில்லை.

14) 4 வருடத்திற்கு முன்பாக என் மாமனார் கால் உடைந்து ஈரோட்டில் உள்ள நிலையில் வங்கி பரிவர்த்தனை மூலமாக கொடுக்கிறேன். என் மாமனாருடன் யார் உள்ளார் என்றால் மாமியார் உள்ளார். என் மாமியாருக்கு நான் கடன் பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரி வாங்கிய கடனுக்கு ஆதாரமாக இந்த காசோலையை தவிர வேறு ஏதாவது ஆதாரம் பெற்றேனா என்றால் காசோலை மட்டுமே பெற்றேன். இரண்டு மாதத்தில் பணத்தை திருப்பி கொடுப்பதாக சொன்னதால் கொடுத்தேன். எதிரி பணத்தை என் வீட்டிற்கு வந்து பெற்றார். பணம் பெற்ற போது யார் இருந்தனர் என்றால் என் மனைவி, என் அக்கா, என் அம்மா உடன் இருந்தனர்.

15) நான் பணம் கொடுத்த பின்னர் காசோலையை எதிரி பூர்த்தி செய்து கொடுத்தார். கையெழுத்து ஏற்கனவே இருந்தது, பூர்த்திமட்டும் செய்து கொடுத்தார். காசோலையில் உள்ள வாசகம் ஆங்கிலத்தில் இருந்ததா என்றால் ஆமாம். 19.06.2024 ம் தேதிக்கு பின்னிட்டு இந்த தேதி அடிக்கப்பட்டு மீண்டும் புதிதாக எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு இல்லை. 19.06.2024 என காசோலை எழுதுவதற்கு முன்பாக வேறு தேதி எழுதப்பட்டு அது அழிக்கப்பட்டு அதன் பின்னிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

16. பழனிசாமிக்கு எழுத படிக்க தெரியாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் ஆங்கிலத்தில் காசோலையில் கையொப்பம் செய்ததால் அவருக்கு எழுத படிக்க தெரியும். ஆஜர் எதிரி என் முன்பாக கைப்பட காசோலையை எழுதி கொடுத்தார் என்றால் ஆமாம். ரூ.30,00,000/—ல் 3 என்ற எண் மட்டும் காசோலையில் திருத்தப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் எதிரி பணத்தை வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே சொன்னவாறு காசோலையில் ஏற்கனவே கையொப்பம் மட்டும் இடப்பட்டு காசோலையில் கண்டுள்ள வாசகம், தேதி, தொகை அனைத்தும் என் முன்பாக எதிரியால் நிரப்பப்பட்டது என்றால் சரிதான்.

17. எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் PVC பைப் கம்பெனி வைத்துள்ளார். கருமலைக்கூடலில் தானேஷ்வரன் என்பவர் PVC பைப் கம்பெனி வைத்த நபரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் PVC பைப் கம்பெனி நடத்தி வருகிறேனா என்றால் என் அப்பா என் மனைவி பெயரில் PVC பைப் கம்பெனி நடத்தி வருகிறார். PVC பைப் கம்பெனியின் வரவு செலவு கணக்கை நான் பார்த்து வருகிறேன் என்றால் இல்லை என் மனைவி பார்த்து வருகிறார். அந்த PVC பைப் கம்பெனியில் எவ்வளவு வருமானம் வரும் என்றால் என் மனைவிக்கு தான் தெரியும். நான் வரவு செலவு செய்வதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் நான் ஏற்றுக் கொள்வேனா என்றால் ஏற்றுகொள்வேன்.

8. PVC பைப் கம்பெனி தானேஷ்வரன், பழனிசாமி நான் மூவரும் என் மனைவிக்கு உரிமையான கம்பெனியை லீஸ்க்கு நடத்தி வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த காலகட்டத்தில் எனக்கும் பழனிசாமிக்கும் பரிவரத்தனை நிறைய இருந்தது என்றால் இல்லை. அதற்குண்டான ஆவணத்தை தாக்கல் செய்தால் நான் அதை ஏற்றுக் கொள்வேனா என்றால் ஏற்றுக் கொள்வேன்.

ஆவணங்கள் கொண்டு வந்து காட்டி கேட்க வேண்டியுள்ளதால் குறுக்கு விசாணை ஒத்திவைக்கப்படுகிறது.

**ஓம்/– தே.மயில்சாமி**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**